# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:22** **தேதி:-13.09.2017**

## துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்து 15.09.2017ல் சக்தி வாய்ந்த ஆர்ப்பாட்டம் மேலும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

12.09.2017 அன்று கூடிய மத்திய அமைச்சரவை துணை டவர் நிறுவனம் அமைக்க முடிவெடுத்துள்ளதை கடந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசின் இந்த முடிவு அமலாக்கம் செய்யப்பட்டால், அது BSNL நிறுவனத்தை சீரழித்துவிடும். அதன் 70,000 டவர்கள் கொள்ளை போய் விடும். மொபைல் டவர்கள் இல்லாத BSNL நிறுவனம் எழும்புக் கூடாய் மாறிவிடும். இந்த துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்ப்பது அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அடிப்படைக் கடமையாகும். துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்ப்பதில் முதல் படியாக நாடு முழுவதும் 15.09.2017 அன்று சக்தி வாய்ந்த ஆர்ப்பாட்டங்களை நாம் நடத்திட வேண்டும். அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உள்ளனர். கிளை மாவட்ட சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்து சங்கங்களையும் அணுகி இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும்.

அடுத்த கட்ட போராட்டத்தை திட்டமிட அனைத்து சங்கங்களும் புதுடெல்லியில் 20.09.2017 அன்று கூட உள்ளன. துணை டவர் நிறுவனம் அமைப்பதை தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அந்தக் கூட்டத்தில் திட்டமிடப்படும். நாம் அந்த போராட்டங்களையும் சக்தி வாய்ந்ததாக அனைத்து ஊழியர்களையும், அதிகாரிகளையும் இணைத்து நடத்திட வேண்டும்.

நாம் தமிழகத்தில் ஏற்கனவே 14.09.2017 அன்று ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விட்டிருந்தோம். 14.09.2017 ஆர்ப்பாட்டத்தை போராடும் தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஆதரவான போராட்டமாக நடத்திட வேண்டும். 15.09.2017 அன்று அனைத்து சங்கங்களையும் ஒன்று திரட்டி துணை டவர் நிறுவனத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமாக நடத்திடவேண்டும் என தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**ஊதிய மாற்றத்திற்கான அடுத்த கட்ட போராட்டங்கள்:-** ஊதிய மாற்றம் தொடர்பாக திட்டமிட அனைத்து சங்கங்களின் கூட்டம் புது டெல்லியில் 26.09.2017 அன்று நடைபெறும். இதில் அனைத்து சங்கங்களும் பங்கேற்க உள்ளன.

**தேசியகவுன்சில் கூட்டம்:-** ஆய்படு பொருட்களை விவாதிக்க போதிய நேரம் இல்லாத காரணத்தால் 11.05.2017 அன்று நடைபெற்ற 35வது தேசிய கவுன்சில் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் இதுவரை நடைபெற வில்லை. 13.09.2017 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் GM(SR) திரு A.M.குப்தா அவரக்ளை சந்தித்து இந்தக் கூட்டத்தை தாமதமின்றி நடத்த வலியுறுத்தினார். முக்கியமான பண்டிகைகள் வர இருப்பதின் காரணமாக அக்டோபர் 24ஆம் தேதி இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும் என நமது பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். DIRECTOR(HR) அவர்களுடன் விவாதித்து தேதியை இறுதி செய்வதாக GM(SR) தெரிவித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்**